# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு உ௰௩ | மலர் |
|---|---|---|
| ௪௬ | பரிதாபி, வைகாசி (1972 — மே — சூன்) | உ |


## கரந்தைத் தமிழ்ச் சங்கம்

## மணிவிழா

அன்பார்ந்த ஐயன்மீர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றி 60 ஆண்டுகள் நிறைவேறியுள்ளன, வரும் சூலைத் திங்களில் சங்கத்தின் மணி விழாவைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகின்றன. 1911-ஆம் ஆண்டில் இச்சங்கம் தோன்றிய காலத்தில் தமிழ் மக்கள் தமிழைப் புறக்கணித்திருந்தார்கள். கூட்டங்களில் தமிழில் பேசப் போதிய திறமையற்றவர்களாகவோ அல்லது அங்ஙனம் பேசுவது குறைவாகக் கருதியோ இருந்தனர். கல்வி நிலையங்களில் மாணவர் தமிழில் பயிற்சிபெற ஏற்ற வாய்ப்புகள் இல்லாமலிருந்தன. மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப் பெற்ற மதிப்புத் தமிழாசிரியர்களுக்குக் கொடுக்கப் பெறாதிருந்தது. மக்கள் கடிதத் தொடர்புகளை ஆங்கிலத்தில் எழுதுவதே ஏற்றமுடைத்து எனக் கருதினர். பொதுவாகக் கூறுமிடத்து, தமிழ் தாழ்வுற்றிருந்ததெனக் கூறலாம். இப்போது தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி என்பதை உலக முழுவதும் உணர்ந்து போற்றப்பெறும் நிலையை அடைந்துள்ளது. இந்த மாறுதலுக்குக் காரணம் சில தமிழ்ப் பேரறிஞர்களும் கரந்தைத் தமிழ்ச் சங்கமும் அக்காலத்தில் ஆற்றிய அடிப்படையான தொண்டுகளும் பின்னர்த் தமிழ் நாடு அரசினர் அளித்தஆதரவும் ஆகும், சுருங்கக் கூறின், நமது சங்கம் தமிழின் தனிநிலையைப் பாதுகாக்கும் பணியை முதற் கடமையாகக் கொண்ட சங்கமாக முதன் முதல் தோன்றித்தமிழ் வளர்ச்சிக்கான ஆக்கப் பணிகளைச்செய்து வந்தது. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் மொழிக்கு

ஆதரவில்லாமலும் ஓரளவுக்கு எதிர்ப்பும் இருந்த சூழ்நிலையில் தளராமல் ஆக்கப்பணிகளைச் செய்து வந்ததை இப்போது எண்ணிப் பார்க்கும் போது சங்கத்தின் தொண்டுகள் எத்துணைச் சிறந்ததெனத் தெளிவாகிறது.

நமது சங்கம் கரந்தைப் புலவர் கல்லூரி, உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி, இராதாகிருட்டின தொடக்கப்பள்ளி, குழந்தைகள் இல்லம் ஆகிய நான்கு கல்வி நிலையங்களையும், திக்கற்ற மாணவர் இல்லம் என்ற விடுதியையும், பெரும் நூல் நிலையமொன்றினையும் நடத்தி வருகின்றது. சிறந்த இலக்கியத் திங்களிதழாகிய தமிழ்ப் பொழிலைக் கடந்த 45 ஆண்டுகளாக வெளியிட்டு வருகின்றது. சங்கம் தோன்றியது முதல் முப்பது ஆண்டுகள் அதன் ஒப்பற்ற தலைவராக இருந்து தமிழவேள் த. வே. உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் தன்னலமற்ற தொண்டாற்றி வந்தார்கள். அவர்களின் உருவச்சிலையை மணி விழாவின் போது நிறுவ ஏற்பாடாகி வருகிறது: மணி விழா சிறப்புற மூன்று நாட்களில் நடத்தவும், கருத்தரங்கு, புத்தகக் கண்காட்சி முதலியன நடைபெறவும் ஏற்பாடாகி வருகின்றன. தமிழ்நாட்டு அரசின் மாண்புமிகு முதலமைச்சர், கல்வியமைச்சர் அவர்களும் சில தமிழ்ப் பேரறிஞர்களும் மணி விழாவில் பங்கேற்க இசைந்துள்ளார்கள். தமிழன்பர்கள் எல்லோரும் சங்க மணி விழாவிற்குத் தங்களாலான ஆதரவைத் தந்தருள வேண்டுகிறோம்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. — குறள்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்

நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்.
—பாரதியார்.

கருந்திட்டைக்குடி
21—5—72

இங்ஙனம்,
**கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்.**

---

நிதி அனுப்புவோர் "பொருளாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2, என்ற முகவரிக்கு அனுப்பவேண்டுகிறோம்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்கு அளிக்கும் நன்கொடைகளுக்கு வருமானவரியிலிருந்து விலக்குண்டு.

# உலகநீதி — திறனாய்வு

புலவர். தி. நா. அறிவுஒளி,
திருக்கழுக்குன்றம்.

அழகுணர்வு இல்லாத வாழ்வே துன்ப வாழ்வாம். அதுவே நிரைய வாழ்வாகும் அழகுணர்வு ஆர்ந்து பொங்கி அமைதி யின்பம் பயக்கும் ஆறுதல் வாழ்வே பேரின்ப வாழ்க்கையாகும்.

அம், அழகு அணி, எழில், ஏர், கவின், காமர், மாதர், சீர், முருகு, வனப்பு பொலிவு, கோலம், மஞ்சு, பஞ்சுளம், ஓயில் செம்மை பொன் பூ, நலம், திரு, ஒளி, நேர், மாட்சி, ஐ, இயல் எனப் பல சொற்கள் அழகைக் குறிக்கத் தமிழில் ஆளப்படுகின் றன. அழகின் பல சிறப்பியல்புகளை, நுட்பக்குறிப்புகளைப் பண் டைத் தண்டமிழ்ப் புலவோர் விளக்குகின்றனர். கவினுணர்வும், முருகியல் வாழ்வும், முழுநிறை பண்பாக ஆர்ந்தமைந்திருந்த மையாற்றான் இத்துணை சீரிய நேரிய சொல்லாட்சிகளைப் பயன் படுத்தி வருகின்றனர்.

அழகுணர்வுச் சுவைக்கு இடமில்லாதவாறு இற்றை வாழ்க் கையில் பொறியியற்றன்மை' கட்டாயமாகப் புகுந்துகொண்டு மாந்தரியல்பையே மாற்றி விட்டிருக்கிறது மாந்தனும் பொறி யாகி வாழ்வும் பொறியியக்கமாகி, உணர்வுச் சிதைவும் பெருகி உலகம் அழகற்றதாகுமோ என அஞ்சுகிறேன். கலையுணர்வு வாணிக உணர்வுடையதாக மாறியமைகிறது. அதிலும் செயற் கையின் செல்வாக்கு மிகுகின்றது இந்நிலை வளரக்கூடாது உலகில் செம்மை செந்தண்மை சிறக்கவேண்டும் அழகுச்சுவை, எழில் மெய்ப்பாடு, முருகுணர்வு வளரவேண்டும். இழுக்கு களும் பிறநாட்டுப் பழக்கங்களும் திணிக்கப்பெற்று நமக்குரிய அழகுதேர் வாழ்க்கை மரபு மாளும் நிலைக்கு வந்துள்ளது. ஐயோ! இந்நிலை மாற வேண்டும் புற அழகரினும் அகஅழகர் நனிபலராதல் வேண்டும். எழில் வாழ்வு எழுச்சியுறப் பேரியக் கம் விளைய வேண்டும்

அழகு நிலையானது; அழியா இன்பம் அருள்வது அழகு அக அமைதியை நிலைநிறுத்தி ஆறுதல் ஒளியைச் சுடரச்செய் யும். அழகால் தீமை விளைவதில்லை; நம்மையே மலர்ந்து நகைக் கும்! அழகும் கவர்ச்சியும் இருவேறு உலகங்கள். உள்ளத்தின் உண்மையறம் பொலிகின்ற இடத்தில் மலர்ந்து சிரிக்கும் அழ

கும், பொய்மைப் பளபளப்பில் பகட்டும் ஆர்ப்பாட்ட ஆரவார வெறிப் பேய்மையான கவர்ச்சியும் ஒன்றெனப் பலர் கருதி மயங்குகின்றனர்.

குழந்தையின் அமிழ்த அழகு உள்ளத்தைத் தண்ணெனக் குளிர்விக்கும் பனியழகன்றோ? நெஞ்சத்துயரும் நெடுநோயும் நொடியில் மறந்தோடச் செய்யும் மழலையோவியங்களின் மணி யழகு மாண்பை யாரே விளக்கல் ஒல்லும்?

இயற்கைச் செல்வியின் ஈடிணையில்லாப் பேரழகுப் பெருந் தன்மையைப் பாடாத நாடுண்டா? பாடாத மொழியுண்டா? போற்றாத இலக்கிய ஏடுண்டா? அழகைத் தலைமேற் சூடாத அறிஞருளரோ?

கொஞ்சி வரும் ஆறு. குமுறும் அலைகடல், விண்ணோக்கி விரிந்தோங்கி நிற்கும் மாமலை, பண்பாடும் தண்ணருவி, கண்ணைக் கவர்ந்து கவின்றேவியங் காட்டும் வண்ண எழில் வாழும் வண்ணகம், நெஞ்செல்லாங் கவர்ந்து இனிக்கச் செய்யும் நெடும் பேருலகம், பல்வகை யழகைப் பூண்ட பசுஞ்சோலை, அழகழகான அஃறிணை உயிரினங்கள், பல் வண்ணக்கோலம் புனைந்த மாந்தரினத்து அழகு வாழ்க்கைகள், இயற்கையின் ஒப்பற்ற விருந்துக் காட்சிகள் என இவையெல்லாம் அழகுப் புதுமைகளல்லவோ! இவ்வழகுகள் நம்முணர்வைப் பண்படுத்த வில்லையோ?

அழகுக் காட்சிகளிலே நெஞ்சைப் பறிகொடுத்து நிலை மறந்து, நினைவெல்லாந் தேனூற, உயிரெல்லாம் அமிழ்தாகத் தன்னை மறந்த தனிப் பெருந்தவநிலையில் ஈடுபட்டு, வாழ்வின் சிறுமைகளெல்லாம் ஒழித்துப், பெருமை பொங்கும் வீறுணர்வு செழிக்க அந்தண் நிலையில் வாழும் அழகை, அழகுணர்வில் மூழ்கித் திளைக்கும் உயர்தகுதியை உரைகளால் விளம்பல் ஒல்லாது.

அழகின் ஆட்சியில்தான் கலைமாட்சி நிலைபெறுகிறது. அழகுக் கதிர்களின் ஒளி வீச்சில் தான் வாழ்வின் இன்பக் காட்சி புலனாகிறது.

பாடுபடும் உழவனின் ஏர் உழுது செல்வதில் அழகைக் கண்ட அருந்தமிழர் பெருமரபு உண்மையழகை உழைப்பிலே, உழவிலே, உயிர் ஓம்புதலிலே, வாழ்வின் நுண்மைகளிலே கண்டனர்! அம்மாபெரும் புலவோரின் மனத்திட்பத்திற்கும் அறிவு ஒட்பத்திற்கும் உவமையுண்டோ?

நல்லறங்கள் நிகழுமிடமெல்லாம் அழகின் திருக்கூத்து நிகழ்கிறது! நல்லுரைகள் பொங்கும் இடமெல்லாம் அழகோவியம் கோவில் கொள்கிறது! நல்லெண்ணம் எழும் அழகாகிய அறம் ஆர்ந்தோங்குகிறது!

உணர்வின் தூய்மையில்தான் ஓங்கும் உயர் அழகு ஒளி கால்கிறது! அதனால்தான் தமிழினம் அற நூல்கள் என்னும் அழகுக் கலைத்துறை ஆக்கங்களை உயிரினும் மேலாகப் போற்றி வருகிறது! அறம் புரக்காத தமிழகம் அழகழிந்த பாலையே. முப்பால் தோன்றுதற்கு முன்னிருந்தே அறவுணர்வு தமிழர் குருதியில் சுடர்கிறது. முப்பாலுக்கு அப்பாலும் அழகுநூல்களாம் அறநூல்கள் தோன்றிக்கொண்டே இருப்பதற்கு அடிப்படை வாழ்க்கை ஒழுக்க அழகாம் அறத்தின் பாற்கொண்ட அளவற்ற காதலேயாம்.

அறம் விளங்க அருந்தமிழ் பாடிய அழகுப் புலவோர் அணியுள் உலகநாதரும் ஒருவராவார்.

**ஆசிரியர் :** உலகநீதி, † உலகநாதரின் ஒள்ளிய படைப்பாகும். எண்சீர் மண்டிலங்களால் (விருத்தப்பா) உருவான நூல் உலகநீதி. உயரிய அறிவுரைகளை ஒளி நிலவாக இந்நூல் ஏந்தி நிற்கிறது. கற்றூர்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் அமிழ்தம் உலகநீதி. பதின்மூன்றே பாக்களில் ஆன நூல் இது.

ஒவ்வொரு பாட்டும் எளிநடையிற் கனிந்த கருத்துக் கருவூலம் ஒவ்வோரடியும் அறிவுப் புதையல்! ஒவ்வொரு சொல்லும் உணர்ச்சி மின்னல்! தேர்ந்த புலமையின் கூட்டமிழ்தமான உலகநீதியின் ஆசிரியர் உலகநாதரின் வாழ்வும் வரலாறும் நாமறியக் கூடவில்லை.

---

† "ஆதரித்துப் பலவகையால் பொருளும் தேடி,
அருந்தமிழால் அறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலக நாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி
காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரும்
கருத்துடனே நாடோறும் களிப்பி னோடு
போதமுற்று மிகவாழ்ந்து புகழுந் தேடிப்
பூலோகம் உள்ளளவும் வாழ்வார் தாமே!"

**தொடக்கம் :** "ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டா."— இதுவே முதற்பாட்டின் முதல் அரையடியாகும். கேடில் விழுச் செல்வமாம் கல்வியைப் போற்றி நூல் தொடங்கிய மங்கலமரபு போற்றற் பாலதன்றோ! தொடக்கத்திலேயே நம் முள்ளத்தைப் பாவலர் கொள்ளை கொள்கிறார்;

**சிறந்த கருத்துக்கள் :** "ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டா" என்னும் அறவுரை எத்துணை அருமையானது! தனி வாழ்வில் இனிமை வாழ நிலைக்க, இடையூறின்றிச் சிறக்க, நன்மையடைய இதனைவிடச் சிறந்த அறவுரையும் வேண்டுமா?

'தாயை ஒரு நாளும் மறக்கவேண்டா' எனத் தாய்மையை நன்றியுணர்வோடு போற்றுகிறார்.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலை நனிமிக வெறுக்கிறார்

"போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டா" "கண் நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க முன் இன்று பின் நோக்காச் சொல்" (184) என்ற குறளின் எதிரொலிமேல் கருத்தில் எதிரொலிக்கிறது தம் நண்பரைப் போகச் செய்து, அவர் முதுகின் புறத்தே, அவரைக் குறித்து இகழ்ந்து கூறும் மொழிகளைக் கூறுபவரை வாழ்பவர் என்னாது 'திரிபவர்' என உலகநாதர் கூறியமை எத்துணை கடுமையானது! பலரிடம் திரிந்து புறங் கூறுமியல்பைக் கண்டிப்பதில் தம் மனக் கசப்பை யெல்லாம் ஒன்று திரட்டிக் கூறுகிறார்! வள்ளுவரும், "அறை பறை அன்னர் கயவர் தாம் கேட்ட, மறை பிறர்க்கு உய்த் துரைக்கலான்" (1076) எனப் பறை தெருவெல்லாந் திரிந்து முழங்கிச் செய்தியறிவித்தல் போல் கயவர் தாம் கேட்டறிந்த மறை செய்தியை மற்றவர்க்குச் செலுத்திக் கூறுவர் என்கின்றார். புறங் கூறுபவரைப் பழித்தாற்போலவே, அதைச் செவிகொடுத்துக் கேட்போர்க்கும் உறுதியான அறிவுரை கூறுகிறார் உலக நாதர் "சொல்பவன் வேலையற்றுப் புறங்கூறவந்தாலும், நீ இணங்கிச் செவி சாய்க்காதே!" நீ நேளாது புறக்கணித் தால் புறங்கூறுபவன் அத்தொழிலைச் செய்யமுடியாதல்லவா?"

எந்தக் கயமையும் 'செய்பவர்—செய்கைக்கு உடன்படு வோர்' என இருசாராரைக் கொண்டிருப்பதியல்பே.

'கற்பழிப்பவன். கயமை செய்பவன்; கற்பழிய இசைபவர் செயலுக்குடன்படுபவர்' அல்லரா? இதில் ஒருவர் ஒத்துழைப்பை மறுத்தாலும் தீமை விளையாது. ஆகவே இருசாராருக்கும்

அறிவுறுத்தலே சீரியது உலகநாதர் இந்நுண்மை தெளிந்தே தமது அனைத்து அறிவுரைகளிலும் இருநிலையினர்க்குமே அறிவுறுத்தியுள்ளார்.

"மனம் போன போக்கெல்லாம் போகவேண்டா." என உலகநாதர் சுருங்கச் சொல்லி விளங்க வைத்த அழகிய கருத்துக்கு நிகருண்டோ?

"சென்ற விடத்தாற் செலவிடாது தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பதறிவு." என்னுங் குறளின் பிழிவே மேற்கருத்துரை.

இவெர்ன் பாயெடு (Ivern Boyett) என்பார், "நல்லது எது, தீயது எது என்பது நம் எல்லாருக்கும தெரியும். தீமைக்கு இழுக்கப்படும் போது, அதற்கான வாய்ப்பை நோக்கி எதிர்த்துச் செல்லும் வழியே நமக்குத் தெரியவேண்டும்" எனவுரைத்த கருத்தோடு இக்கருத்தினை ஒப்பிட்டுணர்தல் இனியதாம்.

"குற்றச் செயல்களைச் செய்ய இணங்காமலிருப்பதே நனி இன்றியமையாததாகும். ஆயின், பிறர் குறை கூறுவாரோ என அளவுக்கு மீறிய எச்சரிக்கையுடன் நடப்பவன் அன்புடையவனாக இருக்கலாம், உயர்ந்தோனாக இருக்க முடியாது" 'எனப் புளுட்டாச்சு' கூறிய கருத்து மனக் கட்டுப்பாட்டின் முறையையும் விளக்குகிறது.

சினங் கொள்வதைத் தீது எனக் கடியும் உலகநாதர், சினமுற்றவன் வீட்டுப் பக்கமும் செல்லாதே, அதனால் துன்பம் வரும் என்கிறார்."

"சினந்தேடி அல்லலையுந் தேட வேண்டா;
சினந்திருந்தார் வாசல் வழிச் சேறல் வேண்டா."

'சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி' என்ற குறளின் மறுபிறப்பு இப்பாவடிகள். சீற்றத்தை 'நச்சுமரம்' (Poison Tree) என்று வில்லியம் பிளேகு (William Blake) அரிய பாவில் பாடும் கருத்து இவண் கருதத்தக்கது.

இவர் வழங்கும் அறிவுரைகளுட் சில :

1 "கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டா."
2 கற்புடைய மங்கையரைக் கருத வேண்டா."

"ஒழுக்கம் குலையும்போது மன்பதை சீர்குலைகிறது. பல பெண்களை விரும்பும் ஆணினமும் பல ஆண்களை விரும்பும் பெண்ணினமும் நாட்டில் பெருகுகிறதெனின் சமுகாயம் நிலை தடுமாறுகிறதென்பதையே காட்டும் 'இடர் விளக்கு' (Danger Light) பல பெண்டிர் மீது இச்சை கொள்ளும் செயல் ஒருவனுக்கு வளர்கிறதெனின், அவன் தக்க மருத்துவம் பெறத் தக்கவனுவான்" எனக் கார்னிலியசு (J J Cornelius: M.D.Ph D) என்பார் கூறும் கூற்றுடன் ஒப்பிட்டாய வேண்டும்.

"மனத்தைக் கட்டியாளும் ஆற்றல் பெறுமட்டும், மனிதர் அதன் வழியே உழன்று, பல பாவச் செயல்களைப் புரிவோரா கின்றனர். எல்லாப் பாவங்களுக்கும் காரணமாக நிற்கும் மனத்தை ஒரு வழியில் நிறுத்தும் ஆற்றல் ஒரு சிலருக்கே உண்டு. மனிதரால் எல்லாக் காரியங்களையுஞ் செய்தலாகும். ஆனுல், அவர் மனத்தை யடக்கிச் சும்மாயிருக்கும் ஒரு செயலை மட்டும் மேற்கொள்ளல் அரிது" (என் கடன் பணி செய்து கிடப்பதே — பக் : 40) என திரு. வி. க. அவர்கள், மனத்தை அடக்கியாள்வதன் அருமைப் பாட்டைக் குறிப்பர் கற்புள்ள மாதரைக் கருதி அதனுல் கடைமையுறுவதைப் பெரிதும் ஆசிரியர் இகழ்கிருர்.

3. வாழாமற் பெண்ணை வைத்துத் திரிய வேண்டா"

மகளைப் பெற்ருேர், தக்கபுக்ககத்தில் அம் மகள் தலைவனேடு இல்லறத்தில் வாழுமாறு செய்தல் மிக இன்றியமையாததாம். பெண் வாழாவெட்டியாக வந்து தாயகத்திலிருப்பது அவளுக் குங் கேடு. தாயகத்திற்கும் பழி; புக்ககத்திற்கும் இழுக்காகும்.

இக்காலத்தில், மணவாத மகளிர் தமியராய் மூத்துத் திரிதலையும் காண்கிருேம்! இக்குற்றமும் கண்டித்தற்குரியதே.

---

1 "வில்லேருழவர் பகை கொளினும் கொள்ளற்க சொல் லேருழவர் பகை"

2 "அறன் இயலான் இல்வாழ்வான் என்பான் பிறன் இல்லாள் பெண்மை நயவா தவன்" (147)

'நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறற்குரியாள் தோள் தோயா தார்" (149)

4. "மனையாளைக் குற்றமொன்றும் சொல்லவேண்டா."

இது எவ்வளவு தலைசிறந்த அறிவுரை! மண விழாவில் கணவர்க்கு அறிவுறுத்த வேண்டியதன்றோ? இதே போலக் 'கணவரைக் குற்றமொன்றும் சொல்ல வேண்டா.' எனத் துணைவியர்க்கும் அறிவுறுத்துதல் தலைசிறந்த தொண்டாகும்

கணவன்-மனைவி வாழ்வில், ஒருவர் மீது மற்றவர் குற்றங் கண்டு குறை கூறுவதினாலேயே பெருஞ்சிக்கலும் பூசலும் விளைகின்றன. வாயடக்கம் வாய்க்கும் வாழ்க்கை அமைதியும் ஆறுதலும் அளிப்பதாயிருக்கும் (' The word you don't say is your slave The word you do say is your master. ") 'நீ சொல்லாத சொல் உனக்கடிமை; நீ சொன்ன சொல் உனக்குத் தலைவன்" என்னும் ஆங்கிலப் பழமொழியினை இல்லறத்தினர் உணர்ந் தொழுகினால் எவ்வளவு இனிமையாக வாழலாம்! யாகாவாராயினும் நாகாக்க' என வள்ளுவர் பேரார்வத்தோடு எச்சரித்தமை இதனாலேயேயாம்.

" உங்கள் பேச்சைக் கொண்டுதான் உங்கள் அன்பு மதிக்கப்படும். உங்கள் அன்பைப் போன்றே நடத்தையிருக்கும்; உங்கள் நடத்தையைப் போன்றே வாழ்க்கையிருக்கும்" என சாக்ரடீசு கூறிய அறிவுரை நினைக்கத் தக்கது.

கணவனைக் குற்றங்குறை கூறித் தன் வழிக்கு வளைக்க முயல்பவள் அறிவோ, திறமையோ அற்றவளேயாவாள். அதை விட்டுக், கணவனைப் பாராட்டிப் புகழ்ந்தும், நன்கு மதிப்பளித்தொழுகியும். பெருந்தன்மை காட்டுபவள் வழியில் கணவன் விரைந்து நடப்பான், கணவனும் மனம் விட்டு மனைவியைப் பாராட்டிச் சீராட்டவேண்டும். சிலபோது கடிந்தோ, குற்றங் குறை கூறியோ பழித்தாலும், உடனே அதற்கீடாக அன்பு பாராட்டிக் கழுவாய் தேடுதல் இன்றியமையாததாகும். கணவன் மனைவியைக் குற்றங்கூறிப் பழிப்பதால், அவள் மிகுதியும் உள்ளம் நொந்து, ஊக்கமழிந்து நைவாள். ஆகவேதான், 'மனையாளைக் குற்றமொன்றும் சொல்ல வேண்டா? என உலகநாதர் உணர்த்துகிறார்.

5. "மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டா."

— இவ்வடி. அவ்வையாரின் (பிற்காலத்தினர்) "மதியாதார் தலைவாயில் மிதியாமை கோடி பெறும்' என்னும் பாடலடியினின்றும் தழுவிக் கொள்ளப்பட்டது எனலாம்.

6. கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டா.''

''எண்ணித் துணிக கருமம்'' என்ற குறளின் குறுக்கம் மேற்பாவடியாகும்.

7. ''எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டா.''

—''அல்லற்பட்டு ஆற்ருது அழுத கண்ணீ ரன்றே செல வத்தைத் தேய்க்கும் படை'' என்னுங் குறளின வழிப்பட்டது இக்கருத்து ''பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்'' என்ற குறளின் தெளிபொருள் ''எளி யாரை எதிரிட்டுக்கொள்ள வேண்டா'' என்பதாகும்.

'எதிர்காலம் ஏழை எளியோர் பால் அமைந்துள்ளது' என முன்னத்தால் உணர்ந்த புலவர்திறம் பாராட்டத்தக்கதாம்.

8. ''வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டா''

—மன்ருடிகள் வழக்கழிவு சொல்லி வல்லாண்மை செய் வதை யாரே அறியார்? சொல்லாற்றலால் பொய் மெய்யாதலும், மெய் பொய்யாதலும் வழக்கல்லவா? இதே கருத்தினை அதி வீரராம பாண்டியர் தமது நறுந்தொகை (வெற்றிவேற்கை) நூலில்,

''பொய்யுடை யொருவன் சொல் வன்மையினுல்
மெய்போ லும்மே! மெய்போ லும்மே!
மெய்யுடை யொருவன் சொல மாட்டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே'' எனக்குறிக்

கிருர். தம் சொற்றிறனுல் நேர்மையைக் கொன்று விட்டதாக மகிழ்தல் தீது. ஏனெனில் உண்மைக்கும் நேர்மைக்கும் சாவில்லை. அது மறைக்கப்படலாம்; ஆனுல பொய்யிருள் கழிய மெய்யொளி புலர்வது திண்ணமே.

9. ''கூருக்கி ஒரு குடியைக் கெடுக்க வேண்டா.''

10. ''கொண்டைமேற் பூத்தேடி முடிக்க வேண்டா.''

சிலர் பிறர் குடி கெடுப்பதையே தம் தொழிலாகக் கொண் டுள்ளனர். 'தன்னுயிர் போல மன்னுயிர் போற்றுக' என்னும் அறிவுரைக்கு நேர் எதிரிகள் இத்தகையர். அன்போடு ஒன்றி வாழும் உடன் பிறந்தோரைக் கோள்மூட்டிப் பிரிப்பர்; கூடி வாழும் காதலரை ஐயநோய் மூட்டிப் பகைத்துப் பிரியச்செய்வர்.

இந்த வகைகளிலெல்லாம் 'குடிகெடுப்போர்' தம் வயிறு வளர்ப்பதையே பெரிதாகக் கருதுவர். இத்தீங்குகளால் இன்று வருவாய் வரினும், பின்னர் அவர்க்கே தீமை விளையும் ஆதலின், 'கூறுக்கிக் குடிக்கெடுக்காதே' என்கின்றனர்.

மகளிர் சிலரும், பிறள் ஒருத்திக்குரியவனை மயக்கி அவன் பொருளைப் பறித்துச் செல்வ வாழ்வில் திளைப்பதை உலகநாதர் கண்டிக்கிறார். 'கொண்டை விரித்து ஒருத்தி வருந்தும்போது, நீ மட்டும் கொண்டைமேற் பூததேடி முடிக்காதே' என்கிறார்.

''வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டா.'' 'செயற்கரிய செய்யும் பெரியோரைத் துணைக்கொள்' என வள்ளுவர் அறிவுறுத்தியமையை உலகநாதர் இக்கருத்தில் வற்புறுத்துகிறார்.

எளிதில் பொருள் விளங்கும் பழமொழி போல ஒவ்வொரு வரியும அமைந்துள்ளது. தன்னுடைய கருத்தாக இல்லாமலிருந்தும், எளிய பாநடையில் தெள்ளத் தெளிந்த முறையில் அறம் பாடியுள்ள புலவர் திறம் போற்றத்தக்கதேயாகும்.

குறை: இச் சிறு நூலில் வடமொழிச் சொற்கள் ஆளப்பட்டுள்ளமை ஒரு குறையாகும். இடைக்காலக் 'கலப்பு மனப்பான்மை' உலக நாதரிடமும் காணப்படுகிறது. வழூச் சொற்கள் ஒரு சில இந்நூலில் காணப்படுகின்றன. அவை நீக்கப்பட்டிருக்கலாம்.

சொல்லாட்சி: பெரியவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, சிறுவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பர். அப்போது, ''நீ என் வாயைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? போய் வேலையைப் பார்!'' என்பர். இந்த 'வாயைப் பார்த்தல்' என்னுந்தொடரை உலகநாதர், 'வார்த்தை சொல்வார் வாய் பார்த்துத் திரிய வேண்டா.'' என ஆண்டுள்ளார்.

இவர் 'வாயில்' என்ற சொல்லை 'வாசல்' எனப் பேச்சு நடையில் ஆள்கிறார். சினந்திருந்தார் வாசல் வழிச் சேறல் வேண்டா.'', ''மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டா.''; என ஆள்கிறார். இத்தகு கொச்சை வழக்குகளை இலக்கியத்தில் ஆளாமல் இலக்கண மரபினையே புலவோர் போற்ற வேண்டும்.

நோய் என்ற சொல்லையும் 'நோவு' என ஆண்டுள்ளார். ''மகநோவு தனைத் தீர்த்த மருத்துவன்றன் கூலி'' என்பது அவர் ஆட்சியாகும். இதுவும் பேச்சுவழக்கே.

'பொய்க்கணக்கு' என்னும் பொருளில் 'கணக்கழிவு' என்ற சொல்லை ஆள்கிருர் கணக்கழிவை ஒரு நாளும் பேச வேண்டா."

'குண்டுணி' என்ற வழக்கை, ஊரோடுங் குண்டுணியாய்த் திரிய வேண்டா" என ஆள்கிருர் வேலை செய்யாது வெட்டியாகத்திரியும் மடியனைக் 'குண்டு மணி' என வழங்குகிருர்.

கடன் வாங்குபவருக்குச் சான்ருளராக, ஈடுகட்டுபவராக வருபவரைப் 'பிணையர்' என்கிருர். இவ்வாறு ஈடுபடலை 'பிணைபடல்' (பிணை = Surety) என்கிருர் உலகநாதர். "பிணைபட்டுத் துணை போகித் திரியவேண்டா."

"மனக்கசப்பால் இகல் விளைத்தலை," சிலுகிடுதல் என்கிருர் ஆசிரியர். "மனஞ்சலித்துச் சிலுகிட்டுத் திரியவேண்டா" என்பர். இப்பேச்சுவழக்கு நூல் வழக்கிலில்லாதது; பிற்காலத்தது.

கண்ணோட்டம் (இரக்கம் அல்லது அருள் காட்டுதல்) என வள்ளுவர் வழங்கிய பண்பார் நறுஞ்சொல்லை தன்நூலில் 'கண்' எனச்சுருக்கி ஆள்கிருர். "கண்ணழிவு செய்து துயர் காட்சி வேண்டா."

பொய் வழக்கை, 'வழக்கழிவு' என்கிருர் இதனை 'அழிவழக்கு' (கெடுவழக்கு) என்பர். "வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டா."

இவர் காலச் சொல்லாட்சிகள் இந்நூலால் நமக்குக் கிடைத்துள்ளது, சொல்லாய்வுக்கு மிகவும் பயனளிக்கும்.

**தொழிலாளர்க்கு:** தொழிலாளரைப் புலவோர் எப்போதும் போற்றிப்பாடுவது மரபாகும் பொதுவுடைமைக் கொள்கை இவ்வுலகில் பிறப்பதற்குப் பலநூற்றுண்டுகளுக்கு முன்னரிருந்த தமிழ்மரபு இந்நாகரிகத்தைக் கையாண்டு வருவதை இலக்கியம் கற்றோர் நன்கறிவர்.

உலகநாதர் தொழிலாளர் கூலியைக் குறைத்தலோ, கவர்தலோ, முடக்குதலோ தீமைபயக்கும் என முழங்குகிருர்! ஐந்து தொழில் செய்பவரை வெளிப்படையாகக் குறிக்கிருர்.

"அஞ்சுபேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டா"
அதுவேதிங் கென்னின் நீ சொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணான், நாவிதன்றன் கூலி
சகல கலை ஓதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சறுத்த மருத்துவச்சி கூலி
மகநோவு தனைத்தீர்த்த மருத்துவன்றன் கூலி
இன்சொலுடன் இவர் கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானோ ஏமன்தானே!

ஆசிரியர் என்னுஞ் சொல்லை விட்டு 'வாத்தியார்' என உலகநாதர் ஆள்வது வருத்தத்தையே யளிக்கிறது துணி வெளுப்போர், ஆசிரியர், மருத்துவச்சி, மருத்துவன்' ஆகியோரை முதலாகக் கொண்ட பிற தொழிலாளர் கூலியையும் கொடாதிருப்பது குற்றமாகும் என அறிவுறுத்திய திறம் சீரியதாம்

அறிவுரை: பிறருடைய சொல், செயல், கொள்கை, நடை வாழ்வில் தலையிடுவது உலகில் மிகப் பெரிய மானக்கேடான குற்றமாகும். இக்கயமையை உலகநாதர் பழிக்கிறார் பிறரைப் பழித்துப்பேசி அவர்கள் வாழ்வில் குறுக்கிடுவது கொடுந்தீமை, யாகும். அரசியலாளர் செயலக அலுவலர், அரசுத்துறை ஊழியர், முதலாளியர் முதலியோர் இக்கருத்தைத் தம்முள்ளத்தில் ஆழப்பதித்தல் வேண்டும்.

"தூருக்கித் தலையிட்டுத் திரியவேண்டா" என்ற அறிவுரை உலகமுழுதும் ஏற்க வேண்டியதாம்.

முடிவுரை: அறநூல்களை ஓதியுணர்ந்து தம்மையும் தம்வாழ்வையும் திருத்திக்கொள்ள மக்கள் தயங்காமல் முனையவேண்டும்.

"பிறர் எழுதிய நூல்களைக் கொண்டு உங்களைத் திருத்திக் கொள்வதில் நேரத்தை பயனுக்குக பிறர் வருந்தி உழைத்ததைக் கொண்டு நீங்கள் எளிதாகப் பெறக்கூடிய பயன் இது" என 'சாக்ரடீசு' கூறியுள்ளமையை மக்கள் தெளியவேண்டும்.

'அறிவுரை,' 'அறவுரை' என்றாலே வெறுப்படையும் மனநிலை குமுகாயத்தில் வளர்தலாகாது வாழ்வில் நிலையான இன்பத்தையும், மரபின் நேர்மைகளையும், ஒழுங்கையும், நம்பிக்கையையும், உண்மையையும், நெறியையும் வாழவைப்பது அறநூல்களே, அறநூல் அறிவு செழித்தாலொழிய எதிர்காலம் நல்ல வளமுறாது.

'உலகநீதி' சில சொற்களால் பல கருத்துரைகளை வழங்குகிறது. சிறிய ஆயின், அரிய நூலான உலகநீதி பயனளிக்கும் நன்னூலாகும். யாப்பில் எளிமையும், கருத்தில் உறுதியும், சொல்லில் தெளிவும், நடையில் நேர்மையும் அமைந்த 'உலக நீதி' பழைய கருத்துகளையே கூறினலும், உள்ளத்தில் தைக்கு மாறு கூறுவது புலவரின் புலமைச் சிறப்புக்குச் சான்ருகும். 'சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும்' அழகு இந்நூலில் அமைந்துள்ளது.

இத்தகு நல்ல நூல்கள் தமிழிளைஞர்க்கு நற்பயனளிப்பன. கல்வித்துறை இத்தகு நற்பாக்களை மேலும் ஆக்கமுள்ள முறையில் மாணுக்கருக்கு உணர்த்த ஆவன செய்தல் வேண்டும். மிக மலிவான விலையில் தமிழிலுள்ள அறநூல்கள், எளிய இனிய உரையோடு வெளியிடப்பெற்று மக்கள், மாணுக்கர், மகளிர் யாவருக்கும் கிட்டவேண்டும். அறநூற் கல்வி கட்டாயப் பாடமாக அமைதல் மிகமிக இன்றியமையாததாகும். அத்தகு நூல்களுள் 'உலகநீதி' க்குத்தக்க இடம் திண்ணமாக உண்டு. அறம் வளர்க்க முனையும் திருத்தொண்டர்க்கு என் முதல் வாழ்த்தும் நன்றியும் உரித்தாகும்!

---

## பொழிலன்பர்கள் சுவைக்க.

### மருமகள்

'மருவு மகள்' என்னுஞ் சொல் 'மருமகள்' என வழங்குகிறது. மருவு என்பதற்கு பொருந்து என்பது பொருள். வேறு வீட்டில் பிறந்து, வளர்ந்து நம் வீட்டில் பொருந்துபவள். அதிலும் பொருத்தப்பட்ட ஒரு வளையலைப் பொருத்தம தெரியாமல் தேய்ப்பதும்' மருவுதல் 'என்பது. எனவே 'மருமகள்' என்பதற்குப் பிற வீட்டிலிருந்து நம் வீட்டில் 'கொள்வினை' யால் கட்டப்பட்டுப் பொருதல் தெரியாதபடி தம் மகள் போலவே எல்லா உரிமையும், கடமையும் ஏற்று, வேற்றுமை தெரியாதபடி ஒழுகுபவள் எனப் பொருள்படும்.

**கோ. தியாகராசன், சி. எம். வி. சி.**

தமிழ்ப்பொழில்—1949.

# நாள் ஞாயிறு

வித்துவான். அ. வைத்திலிங்கம்,
தமிழாசிரியர், மண்டபம்.

மாமன்னர் ... ... ...

பல்லாண்டு வாழ்க !

மாமன்னர் ... ... ...

பல்லாண்டு வாழ்க !

வாழ்த்தொலி வானைப் பிளந்து சென்றது. வாழ்த்தியவாறு மறவர் கூட்டம் தெருவெல்லாம் நிரம்பிச் சென்றது. கையிலே வேல், கண்களில் கனல். நெஞ்சிலே உரம். நிலைமையில் தீரம்' பார்த்தவர் வெருண்டோடும் பாவனை, அவர்தம் கால்கள் தூண்களைப் போல இருந்தன. கால்கள் அடிபெயரும் ஒவ்வொரு முறையும் தூண்களே இடம் பெயர்வன என்பதைப் போன்ற காட்சி. அந்த வீரர் திரள்நடுவே தேர் ஒன்று, தேரின் முன் பகுதியில் தாமரைப்பூவின் வடிவைப் போன்ற கொடிஞ்சி, அதன் மீது அமர்ந்து தேரைச் செலுத்திக் கொண்டிருந்தான் பொன்னப்பன். தேரின் உள்ளே அமர்ந்திருந்தான் சோழன் செங்கணான் சிங்கம் போல, தேரின் உச்சியில் திகழ்ந்தது புலிக்கொடி. தேரின் மிசை புலி பறக்க. சிங்கம் அமர்ந்தது போன்ற அக் காட்சி காண்பவர் உள்ளத்தைக் கிளுகிளுக்க வைத்தது. அரபிய நாட்டு வெண்புரவிகள் பூட்டப்பட்டுப் பொலிவுடன் விளங்கியது தேர். அத்தேர் நடுவே வர, அதனைச் சூழ்ந்து கொண்டுதான் வானைப்பிளக்க வாழ்த்தினர் சோழப்படை வீரர் செங்கணானை, சோழ வீரர்களுக்குத்தான் எத்துணை மகிழ்ச்சி! என்ன ஆரவாரம்! ஏன் இத்தனையும்?

"மலைநாட்டான் கணைக்காலிரும்பொறை என்றால் எளிய ஒரு அரசனா அவன்? நிலத்தை ஒத்த திண்மையும் மலையை ஒத்த வலியும் கடலை ஒத்த வளனும் மானை ஒத்த மானமும் உடையவன்றோ அவன்! ஆயிரம் யானைகளுக்குமேல் கொண்டிருப்பவனன்றோ அவன் தன்படையில்! விலங்குகளில் மிகப்பெரியதும் இறந்தாலும் இருந்தாலும் ஆயிரம்பொன் பெறக்கூடியதுமாகிய யானைகளை ஆயிரத்திற்கு மேம்பட்ட அளவையில் வைத்து, யானைப்படையே தனக்குத்தான் உரியது என்பதைப் போலக்

காட்டிக் கொள்பவன் அல்லனே அவன்! அவனை வெல்ல யாரால் இயலும்? ஆனால் அவனுக்குப் போதாத காலம்!'' இப் படித்தான் சோழ வீரர்களே பேசிக்கொண்டார்கள் இல்லை யென்றால், '' மலைநாட்டிலிருந்து சோழ நாட்டிலுள்ள கழுமலத் தில் பாடி வீடு அமைப்பானா? இல்லை! தன் வலிமை மிக்க யானைப் படை கூடத் தூசு போலச் சோழன் படைகளுக்கு முன் னால் பறப்பதைத்தான் காண்பானா? எல்லாம் விதிப்பயன்!'' வேதாந்திகள் பேச்சு.

மாலை நேர வெளிச்சம் மயங்கிக்கொண்டே வருகிறது, வெற்றி ஊர்வலம் அரண்மனையை நெருங்குகிறது. சோழன் செங்கணான் தேரிலிருந்து இறங்கி அரண்மனைக்குள் நுழைகின் றான். வெற்றி விழாவிற்காக நகரெங்கும் தோரணங்களும் அலங்காரமும் பெருகிக்கிடக்கும் அந்நன்னாள் கார்த்திகைத் திரு நாளாக அமைந்து விடுகிறது வீடுகளிலெல்லாம் விளக்குகள் பொருத்தப்பட்டு வெற்றியை விளக்கிக் காட்டுகின்றன. அரண் மனையும் ஒளிமயமாகக் காட்சியளிக்கிறது அன்று முழுமதி நாளாயினும் நிலவு கார்மேகத்தில் மறைநது மீன்களுடன் விளை யாடிக் கொண்டிருக்கிறது ஒளி மங்களாகவே தெரிகிறது, நகர மக்கள் களிப்பில் மூழ்கிக் கள்ளையும் தேனையும் கலந்து பருகிக் கண்ணை சிவக்க வைக்கிறார்கள் காதலர்கள் இரவெல்லாம் களிப்பக் கடலில் மூழ்கியிருந்தமையால் கண் சிவக்கப் பெறுகிறார் கள். இங்கே இப்படி ஒரே களிப்பு மயமாக இருந்தது என்றாலும் கழுமலப் போர்க்களம், பூமித்தாய் தான் பெற்றெடுத்த மக்கள் இப்படி ஒருவரொடு ஒருவர் போரிட்டுக்கொண்டு பல உயிர் களை மடிய வைக்கிறார்களே என்று வேதனைப்பட்டுச் செயலற்று இருப்பவளைப் போல மயான அமைதியுடன் காட்சியளித்தது. இரவு வரவரப் போர்க்களம்-பிணக்களமாக-சுடுகாடாக-காட்சி யளிக்கத் தொடங்கியது. பகலவன் ஒளிவீசிக் கொண்டிருந்த பொழுது இருபடை வீரர்களும் பகலவனைப் போல் தங்கள் வலி மையை விளக்கிக் காட்டிய காட்சி எங்கே? வேலொடு வேலும் வாளொடு வாளும் உராய்வதால் உண்டாகிய ஒளியும் ஒலியும் ஏன் இப்பொழுது இல்லை கண்கொள்ளாத காட்சியாக இருந்த படை வரிசைகளும் யானைகளும், தேரும் குதிரையும், அரசர் களும் இப்பொழுது எங்கே சென்றார்கள்? யாரையுங் காணா வில்லை பிணங்களைத் தவிர. பிணங்கள் மட்டும் கிடந்தாலாவது அமைதியாக இருக்கும். பார்ப்பவர்க்கு அச்சம் தோன்றாது. போர் முடிந்து ஓய்ந்து சிறிது நேரத்தில், நகரத்தில் மக்களின் ஆரவாரத்தைப் போலல்லவா இங்கு கழுகு, காக்கை, நரியின் ஓலம், அஞ்சாவதர்களுக்கும் அச்சத்தை ஊட்டுகிறது.

"இதுவரை என் வாழ்நாளில் இப்படிப்பட்ட ஒரு போரை நான் பார்த்ததே இல்லை," என்கிறான் ஒரு கிழவன். "சோழன் செங்கணான் சேரனின் யானைப் படைகளைப் பண்ணிய சின்னா பின்னம் ... ... ! சேரன் தன்னிடம் வலிமை மிக்க யானைப் படை உள்ளது என்று இறுமாந்திருந்தான். அந்தோ ! சோழனின் குதிரைப் படை அந்த யானைப் படையைக் கலக்கியதை இப் பொழுது நினைத்தாலும் வயிற்றைக் கலக்குகிறதே. யானைமேல் யானையாகக் கிடந்த தோற்றம் மலைகளை வேரோடு பிடிங்கிப் போட்டால் எப்படித் தெரியும் அதுபோலல்லவா போர்க் களத்தில் கிடக்கின்றன. இம்மாலைப் பொழுதில் இப்பிணங் களைத் தின்ன வந்துள்ள புதுக்காக்கைகளைப்பார் ! வியப்பாக உள்ளதே ! இதுவரை கறுப்புக் காக்கையைத்தான் கண்டிருக்கி றோம். வெள்ளைக் காக்கை உண்டென்று வேடிக்கையாகச் சொல்வோம். இப்பொழுது உண்மையிலேயே சிவப்புக் காக்கையை அதோ பார் அண்ணே !"

"இல்லையடா தம்பி ! பிணத்தின் குருதி படிந்து காக்கை சிகப்பாயிற்று அது சிகப்புக் காக்கை இல்லை. கறுப்புக் காக்கை தான்" — இது கழுமலத்தார் இருவர் போர் நடந்த இடத்தின் வழியாக வருகின்றவர் பேசிக்கொள்வது, வழிநெடுகப் போர்க் களக் காட்சிகளைக் கண்டு மனமுருகிக் கொண்டே வருகிறார்கள். யானைகளின் மேல் அம்பு தைத்திருத்தல் மலையின்மேல் குருவிகள் அமர்ந்திருப்பதைப் போலக் காணப்படுகிறது மேலெல்லாம் குருதியொழுக ஒரு வீரன் யானையின் தந்தத்தைப் பிடித்தபடியே கிடக்கிறான். இவன் அவ்யானையால் தாக்கப்பட்டு அவ்யானை யின் கொம்பையே ஊன்று கோலாகக் கொண்டு எழமுயன்றவன் போலும். யானைகளின் துதிக்கை வெட்டப்பட்டு இன்னமும் துதிக்கையிலிருந்து குருதி சொரிந்து கொண்டிருக்கிறது பவள வணிகன் தன் நீண்ட கரிய பையிலிருந்து பவளத்தைக் கொட்டு வதைப் போலல்லவா துதிக்கையிலிருந்து குருதி சிந்துகிறது. போர்க்களமா இது ! தச்சனுடைய தொழிற் பள்ளியில் வெட்டப் பட்டும் துளைக்கப்பட்டும் அறுக்கப்பட்டும்கிடக்கும் பொருள்களைப் போலலலவா இவை கிடக்கின்றன. குருதி எங்கும் பாய்வதால் சிவந்துகிடக்கும் போர்க்களம் இக்கார்த்திகையன்று விளக்கேற்றி வைக்கப்பட்ட இடத்தைப் போன்றுள்ளதே. அதோ ஒரு களிறு, மூன்று கொப்புடையதா ? இல்லை, இல்லை ! ஓர் எஃகம் தைக்கப் பட்டுக் கிடக்கிறது துணிக்கப்பட்டுக் கிடக்கின்ற யானைத் துதிக் கைகள் கிரகணம் பிடித்த பிறையைப் போல்வதைப் பார் !" என்று பேசிக்கொண்டே சென்றார்கள் அவ்வழிப் போக்கர்கள். யானைகள் கொம்புகளை நிலத்திலூன்றிக் கிடப்பது கலப்பை

நிலத்தை உழுவதைப் போலவும் சில யானைகள் நிலத்தில் கவிழ்ந்து, காதைச் சாய்த்துக் கொண்டு கிடப்பது மாநிலம் கூறும் மறையைக் கேட்பது போலவும் அவர்களுக்குக் காட்சி யளித்தன. போர்க்களக் காட்சி அவர்களுக்கு இரவு முழுதும் உறக்கத்தையே மறக்கடித்து விட்டது. அரை குறையாக உறக்கம் வந்த போதெல்லாம் கழுமலப் போர்க்களமே அவர்கள் கண் ணெதிரே கனவில் தோன்றியது.

தலைநகரம் இருளில் மூழ்கிக் கிடந்து கதிரவனொளியால் விழித்தெழுந்தது. முந்திய இரவு இருந்த ஆரவாரம் இப் பொழுது இல்லை நகரத்தில். ஏதோ ஒரு மௌன நிலையில் இருப் பதைப் போன்ற நிலை-தெளிவு பிறந்ததைப் போன்ற நிலை-சம நிலையில் இருப்பவன் நிலையை-நகரம் பெற்றிருந்தது. இரவுப் பொழுது கூத்தும் கேளிக்கையும் வெற்றி முழக்கமும் தலைகால் தெரியாத மகிழ்ச்சியுமாக இருந்த குழந்தைத்தன ஆரவாரம் கலைந்து, ஒரு மாமுனிவனின் அமைதியும் சாந்தமும் பெற்று, ஆரவாரமின்றித் தெளிவுடன் காணப்படுவதைப் போலக் காணப்பட்டது. காலைப் பொழுது கழிந்து நண்பகல் வந்து சேர்ந்தது. கழுமலத்தில் சிறைபிடிக்கப்பட்டிருந்த சேரன் கணைக் காலிரும்பொறை சிறையிலடைக்கப்பட்டிருந்தான்; அவன் வாழ் நாளிலேயே அடைந்திராத தோல்வியை அடைந்திருந்தான். எது வலிமையுடைய படை என்று கருதி இருந்தானோ அந்த யானைப்படை புலி முன்னர் அகப்பட்ட யானையைப் போல மடிந்து ஒழிந்ததைக் கண்டான்.

“நம்முடைய அகங்காரமே நம்மைக் கெடுத்து விட்டது. ஆயினும், புலி தாக்கினால் அஞ்சும் என்பதை ஏனோ நாம் நினைவு கூரவில்லை தொலையட்டும், போர்க் களத்திலாவது நாம் வீரச் சாவு பெற்றிருக்கக் கூடாதா? இங்கு இப்படி கைதியாகிய நிலை யில் இருக்கவேண்டியுள்ளதே! எங்கே இன்னும் காணோம் நீர் கொண்டுவரச் சென்றவனை,” என்று எண்ணியபடி இருந்தவன் காவலர் தன்னைக் குறைத்து மதிக்க நீர் உண்ணாது இறக்கிறான்.

மாலையிலும் முன்னிரவுப் பகுதியிலும் போர்க்களத்திலிருந்து வந்தவுடன் வெற்றி விழா கொண்டாடிய களைப்பில் சோழன் செயல் மறந்து ஆழ்ந்திருந்தான். அவனுக்கு நேற்றைய காட்சி கள் ஏதோ கனவு போலத் தென்பட்டனவே யல்லாது அவை யெல்லாம் உண்மை என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்க வில்லை.

தன்னைத்தானே ஐயுற்றுக்கொண்டான் சோழன். அவனுடைய மனமும் சலனமற்றே விளங்கியது. நேற்றிருந்த வீரமும் பகை யுணர்ச்சியும் ஆவலும் இன்று ஏனோ அவன் மனத்தில் தோன்ற வில்லை. ஒருவேளை, வெற்றி பெற்றமையால் இனி, சேரனுடன் மோத வேண்டியதில்லை என்ற மன நிலையில் தோன்றிய எண்ணமோ? "ஏன் நமக்கு இத்தகைய எண்ணங்கள் ஓடுகின்றன." தன்னை மாற்றிக்கொள்ள முனைந்தான் சோழன்.

"நான் ஒரு மன்னர் மன்னன்; சேரனுடைய யானைப் படையை வென்று விட்டேன். சேர நாடும் என்வசமே. மிகப் பெரிய யானைப்படையை யுடையவன் சேரன்! பாவம்! சிறையில் கிடக்கின்றான்! அவன் இப்பொழுது என் கைதி. அடடா! நமக்கு இதற்குள் என்னென்ன நினைப்பு, நேற்று வரை சேரனும் ஓர் அரசன்தானே. அவனைச் சென்று கண்டு வருவோம்."

சிறை வாயிலை அடைந்த செங்கணான் சேரன் இறந்து கிடப்பதைக் காண்கின்றான். பழைய நிர்ச்சிந்தையான தெளிவான சிந்தை எப்படியோ வந்து அவனிடத்தே பொருந்துகிறது. நாம் யாருக்காக? எதற்காக? ஏன்? போரிட்டோம் என்ற கேள்விகள் அவன் மனத்தில் அணுச்சுழற்சியைப் போல் சுழன்று அரிக்கத் தொடங்கி விட்டன.

நாள் ஞாயிறு நாள் தோறும் காட்டும் காட்சி அவன் கண்களுக்குப் புலனாயிற்று. சிறையை விட்டு வெளியே வந்தான். காலையில் தோன்றிய ஞாயிறு. உலகின் இயற்கை இதுதான், என்னைப்போல மறைந்து விட்டான், இதனை நீயும் அறிந்து கொள் என்று சோழனுக்குக் கூறுவதைப்போல மேலைவானத்தில் போர்க்களச் சிவப்பைச் செக்கர் வானத்தில் கோலமிட்டுக் காட்டி யானைப்படை போன்ற மேகங்களினூடே மறைந்து சென்றது.

# கோத்தமொழியில் ழகரம்

கோ. சுப்பையா, எம். ஏ.,
ஆராய்ச்சியாளர், மொழி இயல்துறை,
அண்ணுமலைப் பல்கலைக்கழகம், அண்ணுமலை நகர்.

தமிழிலும் மலையாளத்திலும் பயின்று வழங்கும் ழகரம் தொல் திராவிடமொழியின் ஒலியன்களுள் (Proto Dravidian Phonemes) ஒன்ருகும்[1]. மூலத்திராவிட மொழியினின்றும் கிளைத்தெழுந்த மொழிகளில் இவ்வொலியன் பல்வேறு ஒலிகளாகத்திரிந்து வழங்குகின்றது. திராவிடமொழிகளுள் ஒன்ருகிய [2]கோத்த மொழியில் ழகரம் g, ள, T[3], ய ஆகிய ஒலிகளாகத்திரிந்து வழங்குகின்றது. ழகரத்தைக்குறித்து விரிவாக ஆராய்ந்த பேராசிரியர். பி. எச் கிருட்டிணமூர்த்தி அவர்கள் T கரம் ஒன்றே கோத்தமொழியில் ழகரத்தின் திரிபாகக் (releex) கொள்ளத்தக்கது எனக் கருதுகிருர்[4].

கோத்நமொழியை விரிவாக ஆராய்ந்தபோது ழகரம் மேற் குறித்த ஒலிகளாக மட்டுமன்றி லகர, ரகரங்களாகத்திரிந்தும், கெட்டும் (@)[5] அமையும் நிலையை யான் காண முடிந்தது. இங்ஙனம் ழகரம் பல ஒலிகளாகத்திரிந்து அமைந்த நிலையைச் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

*ழ் > ள் :—

அகர, ஆகாரங்களின் முன்னர் தொல் திராவிட ழகரம் கோத்த மொழியில் ளகரமாகத்திரிவதுடன், அகரமும், அகரத்தை யடுத்து ஈற்றொற்றியாக யகரம் நிகழ்ந்தால் அகரத்துடன் யகரமும் ஒருங்கே கெட்டு நிற்கின்றது.

---

1. தொல் திராவிட மொழியின் மெய் யொலியன்களாவன (திராவிடமொழி சொல் பிறப்பியல் அகராதியிலிருந்து மேற் கொள்ளப்பட்டது : பக் : XII) : க, ச, ட, த, ப, ற, ங, ஞ, ம, ந, ன, ண, ய ர, ல, வ, ழ, ள என்பனவாகும்.

2. கோத்தர்கள்—ஓர் அறிமுகம், செந்தமிழ், செப். 69. மதுரை; திராவிடமொழி சொல் பிறப்பியல் அகராதி கோத்த மொழிக்கு g, ள, T, ய என்பன தொல் திராவிட மொழியின் ழகரத்தின் திரிபுகள் எனக்கூறுகிறது. (A Dravidian Etymological Dictionary. PP : XII.)

எ—கா:—

முழம் (முழ்+அம்) > *மொளம் > மொள்ம். ‘அளவுக்கோல்’

(புழை>) புழய் (புழ்+அய்) > *புளய் ▷*புள்ய்>புள். துவாரம்!

உழக்கு (உழ்+அக்கு)>* ஒளக்கு> ஒள்க் ‘உழக்கை’

குழாய் (குழ்+ஆய்)> *கொளாய்> கொளாய். ‘குழாய்.’

(இழை <) இழய் (இழ்+அய்)> *எளய்> எள். ‘நூல்.’

*ழ்> ய்.—

அ, ஆ, உ, ஒ, ஓ ஆகிய உயிர்களை அடுத்து நிகழும் ழகரம் இகர, அகரங்களின் முன்பும், அய் மற்றும் இய் ஆகியவற்றின் முன்பும் யகரமாகத் திரிகின்றது. அய், இய் இரண்டும் படிப் படியாகக் கெட்டு நிற்கும்.

எ—கா:—

(வாழை <) வாழய் (வழ்+அய்)> *வாய்ய்> *வாய்ய்> வாய். ‘வாழை.’

(கோழி <) கோழிய் (கோழ்+இய்)> *கோய்ய்> *கோய்ய்> கோய். ‘கோழி.’

(மழை <) மழய் (மழ்+அய்)> *மயய்> *மய்ய்> மய். ‘மழை’

(தாழி <) தாழி (தாழ்+இ)> *தாய்இ> தாய். ‘தாழ்ப்பாள்.’

(புழ <) புழ (புழ்+அ)> *புய்அ> பெய் ‘நதி.’

*ழ்> @[5] :—

இரட்டித்த வல்லொற்றுக்கள் அல்லது மெல்லொற்றும் அதன் இனமாகிய வல்லொற்றும் பொருந்திய மெய்யொற்றுக்கள்

---

3 தமிழில் சொல்லில் இரு உயிர்களுக்கிடையில் டகரம் உச்சரிக கப்படும் ஒலித்தன்மையை T கரம் கோத்தமொழியில் கொண் டுள்ளது. இதனைக் குறிக்க தமிழில் எழுத்து இல்லாமையால் ஆங்கில எழுத்து பயன்படுத்தப்படுகிறது.

4. Bh. Krishnamurti, Proto Dravidian *Z, Turner Jubilee Volume, Indian Linguistics. PP: 270, 1958.

5. @—இக்குறி ழகரம் கெட்டு நிற்பதைக் குறிக்கும்.

தொடர நிற்கும் இகர, உகரங்களின் முன்னரும், வகரம் தொடர்ந்த இகரத்தின் முன்னரும் நிகழும் ழகரம் கெட்டு நிற்கும் அத்துடன் இகர உகரக் குற்றுயிர்கள் கெட்டு விடும்.

எ—கா :—

குழிப்பு (குழ்+இப்பு) > * குழ்ப்பு> * குப்பு > குப்.

மெழுக்கு (மெழ்+உக்கு)> *மெழ்க்கு> *மெக்கு> மெக்.
'மெழுகுதல்'

மூழுங்கு (மூழ்+உங்கு)> *மூழ்ங்g> *மூங்g> மூg'. 'மூழ்குதல்'

கிழிவு (கிழ்+இவு)> *கிழ்வு> *கிவு> கிவ் , கிழித்தல்'

ஒழுக்கு (ஒழ்+உக்கு)> *ஒழ்க்கு> *ஒக்கு> ஒக். 'ஒழுகுதல்'

சகரம் ககரம் இவற்றின் முன் நிகழும் ழகரம் கெடுவதுடன். சகர, ககரங்கள் ஒலிப்புடைய (Voiced) ஒலிகளாகவும் திரிந்து நிற்கின்றன.

$$ழ் \begin{Bmatrix} க் \\ ச் \end{Bmatrix} \longrightarrow \begin{Bmatrix} g \\ v \\ j \end{Bmatrix}$$

எ—கா :—

உழ்+க்> உg'. 'உழுதல்'

விழ்+க்> விg 'விழுதல்'

அழ்+ச்> அj. 'அமுக்குதல்'

கோத்தமொழியில் இறந்த காலம், இறவாக்காலம் என இரு காலங்களே உள்ளன. பகரம், பூஜ்யம் (@) என்பன இறந்தகால இடை நிலைகளாகும். bகரம், ககரம் என்பன இறவாக்கால இடை நிலைகளாகும். இறந்தகால இடை நிலைகள் நேரிடையாக வினையடி (Verb base) யுடன் சேர்வது கிடையாது. இறந்தகால இடைநிலைகளுக்கு முன்னர் வினையடி மாற்றுயடி (Stem Alternant) யைப் பெறுகின்றது. இம்மாற்றுருபடிக்கு இறந்த கால வினைப்பகுதி (Past Stem Verb) என்றுப் பெயர்.

---

6 தமிழில் ஒலிப்புடைய (Voiced) ஒலியன்களைக் குறிக்க எழுத்து இல்லாதக் காரணத்தினால் ஆங்கில எழுத்து இங்கு பயன் படுத்தப்படுகின்றது.

வினையடியுடன் சில பகுதி ஆக்கிகள் (Stem Formatives) சேர்வ தால் மாற்றுருபடிகள் கிடைக்கின்றன. தகரம்dகரம் சகரம், ஈகா ரம் ல, இகரம் என்பன இறந்தகால வினைப்பகுதி ஆக்கிகளாகும். கட்டுரையின் ஆய்வுக்கு வேண்டி தகரம், dகரம், சகரம் எனும் மூன்று இறந்த காலப்பகுதி ஆக்கிகளும், ககரம் எனும் இறவாக் கால இடை நிலையும் இவண் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒப்பியல் ஆய்வுப்படி, இறந்த காலப் பகுதி ஆக்கிகள் தொல் திராவிடத் தில் இறந்தகால இடைநிலைகளாகும். ] Prof. M. B. Emeneaıu South Dravidian Languages, PP; 372., 1967.

★ ழ் > T :—

தகரம், கரம் இவற்றின் முன்னர் நிகழும் ழகரம் T கர மாகத் திரிந்து அமைகிறது. இரட்டித்த தகரம் கோத்த மொழி யில் குறுகி தகரமாகின்றது. இதேபோல் நகரம் தொடர்ந்த dதகரம் கோத்த மொழியில் dகரமாகி, நகரம் கெட்டு நிற்கிறது.

உயிர்களின் இடை நிலையில் நிகழும் தகரம் dகரமாகத் திரிந்து அமையும் நிலையை கோத்தமொழியில் காணப்படுகிறது.

ர—கா :—

★ கிழித்து (கிழ்+இத்து) ▷ ★ கிழ்த்து ▷ கிTத்து ▷ கிTத் 'கிழித்தல்

★ எழுந்து (எழ்+உந்து) ▷ ★ எழ்ந்து > ★ எTந்d ▷ எTd 'பறத்தல

★ கழுத்து (கழ்+உத்து) > ★ கழ்த்து ▷ ★ கTத் து > கTத் 'கழுத்து.'

★ பொழிது (பொழ்+இது) > ★ பொழ்து ▷ ★ பொTd பொTd. 'பெருக்குதல்'

★ மழுத்து (மழ்+உத்து) ▷ ★ மழ்த்து > ★ மTத்து > மTத். 'கத்தி'

★ பழுது (பழ்+உது) > ★ பழ்d > ★ பTd. 'பழுத்தல்.'

சில சொற்களில் ழகரம் மேற் குறிப்பிட்ட விதிகளுக்கு புற னடையாக கெட்டும், திரிந்தும் விளங்குகிறது. கீழ்வரும் சொற் கள் இதனை விளக்கும்.

(1) ழகரம் இரட்டித்த தகரத்தின் முன்னரும், dகரத்தின் முன் னரும் T கரமாகாமல், ளகரமாகத் திரிந்து நிற்கின்றது.

எழ் + d > எள்d 'எழுதுதல்'

எழ் + த்து ▷ எள்த் 'எழுத்து'

(2) ழகரம் இரட்டித்த ககரத்தின் முன் கெடாமல். T கரமாகி நிற்கிறது.

ஒழுக்கு > ★ ஓTக்கு > ஓTக். 'பூ பின்னுதல்'

(3) ழகரம் இரு சொற்களில் ரகரமாகி நிற்கிறது

| | | |
|---|---|---|
| தமிழ் | : | கோத்தம். |
| குழல் | : | கொர்ல் |
| நிழல் | ; | நெர்ல் |

(4) ழகரம் ஒரே சொல்லில் மட்டும் ஈற்றில் நின்று லகரமாகத் திரிகிறது.

மிதழ் > மெdல் 'மூளை'

மேலே காட்டியுள்ளபடி ஜகரம் ழகரத்தின் திரிபு அல்ல என்பது நன்கு விளங்கும். இறவாக்கால இடைநிலையாகிய **ககரம்** ஜகரமாகிய வினையடியுடன் சேர்ந்து நிற்பது நன்கு புலனாகிறது. தொல் திராவிட ழகரத்திற்கு கோத்தமொழியில் டுஜ்யமும் (@) ஒரு திரிபு என்பதை மேலேயுள்ளவற்றிலிருந்து அறியலாம். கோத்தமொழியில் சொல்லின் இடையிலும் ஈற்றிலும் நிகழும் குற்றுயிர்கள் கெட்டு நிற்கும் என்பதை கீழேயுள்ள எடுத்துக்காட்டுகள் விளக்கும்.

மரம் > மர்ம்; புளுகன் > புள்gன்
மாமன் > மாம்ன்; தொங்கு > தொங்g
குரங்கு ⊳ கொர்g; ஆடு ⊳ ஆT

இரட்டிப்பு மெய்யொற்றுக்கள் குறுகி ஒரு மெய்யாகி நிற்கும் நிலையையும் இம்மொழியின்கண் காணலாம்.

அக்கன் ⊳ அக்ன்; அய்யன் ⊳ அய்ன்
கள்ளன் ⊳ கள்ன்; பத்து ⊳ பத்
உப்பு ⊳ உப்; எட்டு ⊳ எட்

உதவிய நூற்கள் :—

1) T. Burrow; The Primitive ★ l in Kurukh and Malto., Prof. M. B, Emeneau's Sixticth birth day volume, Indian Linguistics 1968 Poona and Annamalai Nagar.

2) T. Bnrrow and N. B. Emeneau: A Dranvidian Etymological Dictionary, oxford, 1961.

3) Bh Krishnamurthi: Proto Dravidian ★ Z., Turner Volume I, Indian Linguistics, 1958 Poona.

4) G Subbiah: Field notes on Kota, (Unpublished work).

# ஏரெலுழுத்து

திரு. ப. இராமன், எம். ஏ.,
தமிழ்த் துணைப்பேராசிரியர்,
விவேகானந்தா கல்லூரி, சென்னை.

**முன்னுரை:** உயிர்கள் பல்வகைப் பிறவிகளை எடுக்கின்றன அவற்றுள் மானிடப் பிறவியே சிறந்தது. 'அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது,' என ஔவையும் கூறினர். ஏனெனில் ஏனைய உயிரினங்கள் ஐயறிவினவாய் இருக்க இம் மானிடரே ஆறறிவுடையராய்ச் சிறப்புறுகின்றனர் அதனுற்றான் இயற்கை அறிவோடு கல்வியெனும் செயற்கை அறிவை மானிடர் பெறவியலுகின்றது.

**இயற்கை அறிவு:** ஒரு பொருளின் தன்மையை ஐம்பொறிகளுள் ஏதேனும் ஒன்ருலோ அன்றிப் பலவாலோ உணர்தலே அறிவாம். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து. உற்றுஅறிதலாம் சுவை, ஒளி ஊறு, ஓசை, நாற்றம் எனும் தன்மைகளை அறிதலே அறிவாம். இவ்வை வகையறிவுகளும் ஏனைய உயிர்கட்கும் மானிடர்க்கும் பொதுவானவையே. ʃ ஓரறிவு மெய்தீண்டத் தோன்றும் உணர்வு. புல், மரம் முதலிய தாவரங்கட்கு இவ்வோரறிவேயுண்டு.

"புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே." (மரபியல்-28)

இரண்டறிவு, உற்றறிதலொடு நாவால் அறிதலுமாகும். நத்தை சிப்பி முதலியன இவ்விருவகை அறிவின.

"நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே." (மரபியல்-29)

மூன்ருமறிவு, தீண்டலும் சுவைத்தலுமாகிய இரண்டுடன் மூக்கால் நுகர்தலுமாம். இவ்வகையின, சிதல், எறும்புமுதலியன

"சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே." (மரபியல்-30)

நான்காமறிவு, மெய்தீண்டல், நாவாற் சுவைத்தல், மூக்கால் நுகர்தலோடு கண்ணுற் காண்டலுமாம் இவ்வகையின, நண்டு தும்பி முதலியன.

"நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (மரபியல்-31)

ஐந்தறிவு மேற்கூறிய நான்கனெடு, செவியாற் கேட்டறிதலாம். இவ்வகையின, மாவும் மாக்களும்.

"மாவும் மாக்களும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (மரபியல்-32)

மாக்கள் எனும் சொல் மனிதர்களையும் பிள்ளைகளையும் குறிக்கும். வடிவால் மனிதரேனும் அறிவால் விலங்கை ஒத்தவரே மாக்களாவர். செவியால் கேட்டறியும் சுவை பெருது, வாயால் உண்ணுஞ் சுவையே அறியும் மனிதர் மனிதரன்று. 'வாயுணர்வின் மாக்கள்' என்றே திருவள்ளுவர் குறித்தார். ஆகையால், உண்ணல் உறங்கல், இடம் பெயர்தல், இனப்பெருக்கம் செய்தல், இன்பதுன்ப உணர்வுகள் ஆகியவற்ருல் விலங்கும் மனிதரும் ஒத்தவரே. மேற்கூறிய ஐவகை அறிவால் விலங்கை ஒத்து வாழும் மனிதரே மாக்களாவர்.

ஆறறிவு, முற்கூறிய ஐந்தனெடு, மனத்தால் உணரும் அறிவாம். இவ்வகையோர், மக்களாவர்; அவரை ஒத்தவரும் ஆவர்

"மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே." (மரபியல்-33)

படிப்படியான உயிரின வளர்ச்சியில், விலங்குகள் ஐயறிவு பெறத்தக்க நிலை எய்துகின்றன வடிவால் மனிதராய் அறிவால் விலங்காய் வாழும் மனிதரும் விலங்கு வகையினரே. ஐயறிவோடு மனத்தாலறியும் அறிவு பெற்றவரே மக்கள் எனும் உயர்வினை அடைகின்றனர். மனத்தாலறிதலை இயற்கையாலும் பெறலாம். செயற்கையாலும் பெறலாம இம்மனத்தை வளர்க்காதவர், சிந்திக்கும் ஆற்றலற்றவர் விலங்கு போன்றவர் அதாவது மாக்கள் என்ருர். சிந்தனை மிக்கார் மக்களாவர் என்ருர் இம் மனஅறிவை உற்றறிதல், நாவாலறிதல், மூக்கால் நுகர்தல் மூன்ருலன்றி ஏனைய ஈரறிவால் வளர்க்கலாம். செவியாற் கேட்டல், கண்ணுல் பார்த்தல், என்றித் திறத்தால் பெருக்கலாம். நாவாற் சுவையன்றிக் கண்ணுற் பார்த்ததைப் படிக்கவும் செய்யலாம். நாப்படைத்த பயன் உணவுச் சுவையன்றி உணர்வுச் சுவையும் பருகுதலாம்.

**விலங்கின் நுண்ணறிவு:** இனித் தொல்காப்பியர் மாவும் மாக்களும் ஐயறிவினவே என எல்லே வகுத்து மனிதரினும் தாழ்வு படைத்தாராயினும், மாக்களும் ஏனைய உயிர்களும் மன அறிவு போன்ற ஒரு வகை நுண்ணறிவு பெற்றெழுகுதல் கண்கூடு. இத்தகைய அறிவை (Intuition) என்பர் பெரும்பாலான உயிரினங்களின் வாழ்க்கை முறையினை இக்காலத்து ஆராய்ந்த உயிர் நூல் வல்லுநர் மனிதரினும் மிகுந்த ஆற்றல் பொருந்திய அறிவுடையனவாக அவை விளங்குவதைத் தெளிவுறுத்து கின்றனர் உயிர்நூற்புலவர் ஒருபுறமிருக்க. செந்தமிழ்ப் பிராட்டி ஔவையாரும், வான் சிலம்பியின் கூடு, வல்லரக்குத் தொல்கறையான், தேன் கூடு முதலானவற்றை அவ்வுயிரினங்களின் நுண்ணறிவிற்குச் சான்று காட்டினர். இது போன்றே, நச்சுப் பொருளை விலக்கி நன்மை தரும் பொருளை உண்ண வல்ல அறிவினையும் பெற்ற உயிரினங்கள் உண்டு, மகப்பேறு கொள்ளும் மந்தியும் தக்க மூலிகையால் நோதலின்றி அதனை அடைதலேயும் அறிந்தோர் கூறுகின்றனர். 'பாம்புக்குப் பகை கருடன்' என்ற பழமொழியாலும். 'பாம்பும் கீரியும்போல்' என்ற பழமொழியாலும், இவ்வுயிரினங்கள் தமக்குப்பகை இன்னவை என்பதைத் தெள்ளிதின் அறிய முடிகின்ற தென்பது தெரிகின்றது. 'பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று வல்லதாம் தாய் நாடிக் கோடலே எனும் நாலடியார்த் தொடரால் தாய்ப்பசு தனது கன்றை அறிந்து கொள்ளும் நுண்ணறிவு பெற்றுள்ள தென்பதும் தெரிகின்றது. இல்லங்களில் வளரும் பல்வகை இன நாய்கள் தனது உரிமையாளர் யார் என்பதையும் அயலார் யார் என்பதையும் அறிகின்றன. இக்காலத்தில் கொலேத் தொழில் புரியும் குற்றவாளிகளை இன்னவரென்றறிதற் பொருட்டு நாய்களேக் காவல் துறையினர் பயன்படுத்துவதைக் காண்கின்றோம். இத்தகு செயல்களனைத்தும் ஐந்தறிவாலன்றி ஆறுவது அறிவால் நடைபெறுவனவே. இவ்வாறுவதறிவு மாவும் மாக்களும் போன்றவற்றிற்கு இறைவனருளால் இயற்கையாய் அமைந்தவை. இருப்பினும் விலங்கு விளையாட்டரங்குகளில் நிகழும் நிகழ்ச்சிகளேக் கண்ணுறும் போழ்து மனிதன் கற்பித்த வாறே அவை செயல் புரிவது தெளிவு. ஆகையின் செயற்கை அறிவை, (கல்வியைப்) பெறுதல் இல்லையெனவும் முற்றும் கூறவியலாது 'கல்லாவன் பறழ், கல்லாக் களிமகன், கல்லா இளையோன்' என்றும் தொடர்களுக்கு உரையாசிரியர் தம் தொழிலேயன்றிப் பிறிதொன்றைக் கல்லாதவர் என்று குறித்தாற் போன்று இவ்விலங்கினங்களும் தமக்கேற்ற தொழிலேக் கற்றும் பிறிதொன்றைக் கல்லாமலும் ஒருவகைச் செயற்கை அறிவு பெற்றனவே என்க.

**உண்மைக் கல்வி.** இங்ஙனம் எண்ணுமிடத்து மாவும் மாக்களும் மக்களும் ஒரு தொகுதியினராக மிகுதியும் வேற்றுமைப் படுத்திக் காட்டும் தகுதியற்றவராய்த் தோன்றுவர். ஆனல் கல்வியின பயன் படைத்துக் காத்து, அழிக்கும் முத்தொழில் வல்ல இறைவன் திருவடி நிழலைப் பற்றுவது தான் என்றும், கற்பவற்றைத் தெளியக் கற்று அவை கூறிய சீரிய ஒழுக்கத்தில் ஒழுகுதலே என்றும் கூறிப் போந்த வள்ளுவன் தன் ஒள்ளிய கருத்தால் விலங்கின் செயற்கை அறிவிற்கும் மனிதர் தம் செயற்கை அறிவிற்கும் உள்ள வேற்றுமை தெற்றெனப் புலப்படும். ஒரு வகைச் செயலைக் கற்பித்தவாறே செய்தல் விலங்கின் செயற்கை அறிவு. ஒரு செயலைக் கற்பித்தவாறே கற்று அதற்கு மேலும் தனது அறிவை வளர்த்துக் கொள்ளுதல் மக்களறிவு. நூலைக் கற்று அறிந்தவாறு செம்மைப் பட்டொழுகுதல் மாந்தர் பெறும் அறிவு இதனுற்றான் 'கல்லாமை' என்ற அதிகாரத்தில் படிக்கவேண்டிய நூல்களைப் படிக்காதிருத்தலே கல்லாதிருத்தல் எனப் பரிமேலழகர் விளங்க உரைத்தார். அறம், பொருள், இன்பம், வீடு, எனும் நான்கு உறுதிப்பொருளை அறிவுறுத்தும் நூல்களே கற்கத் தக்கவை என்றும் அவை தாம் நூற்பயன் எனறும் நன்னூலார் கூறுவதும் காண்க.

**உறுதிப் பொருள்:** இங்ஙன் நிரம்பிய அறிவுடைச் சான்றோரால் ஆக்கிய உறுதிப் பொருளுணர்த்தும் நூற்களைக் கசடறக் கற்றவாறே ஒழுகுதல் கல்வியெனும் செயற்கை அறிவு பெறுதலென்றால் ஏனைய கல்வி பெறுவதால் வரத்தக்க பயனென்? ஐயறிவுடைய விலங்குகள் போன்றே மாந்தர் ஐம்பொறிகளால நுகரும் நுகர்ச்சிக்கே சிறப்பிடமளித்து அவற்றிற்குரிய பொருள்களைத் தேடுவதிலேயே தமது அரிய வாணாளைக்கழிக்கின்றனர்? மேலை நாடுகளில் பல நூறாண்டுகளாய் நுகர்ச்சிப் பொருள் தேடும் செயலில் படிப்படியாக மிகுந்த வளர்ச்சி காட்டி வரும் மாந்தர் தம் உள்ளத்தே ஒரு சிறிதும் செம்மையும் அமைதியும் இல்லாதிருத்தலையும், தக்க கல்வியாலும் ஐம்பொறியடக்கும் பயிற்சியாலும் உயர்ந்து விளங்கும் நமது நாட்டை நோக்கி அவர் விரைந்து வருதலையும் காண்கின்றோம். அறிவியல் துறையில் வளர்ந்து வானத்தையும், நிலவையும் கோளையும் அளப்பினும் மன வளர்ச்சிப் பயிற்சியை எங்குப் பெறுவது? உண்மைக் கல்வியால் ஓங்கியவரிடத்தேயன்றோ பெறவியலும்! இல்லையாயின் இம்மனித முயற்சிகளனைத்தும் இவர் தம் உறுதிப் பயன் விளையாக் கல்வியனைத்தும் ஏரல் எழுத்துப் போல் வதோர் விழுக்காடாவது உண்மை.

# கம்பனில் நாணம்

லி. ரூத்சாய்
ஆய்வு மாணவி, தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்

'நாண்' என்னும் சொல் பல பொருள் படும். ஆயின், மெல்லியலாரின் இயல்புகளில் ஒன்ருன நாணினைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம். பெண்மை யென்னும் உடலுக்கு அன்பு, நாண் முதலிய பண்புகள் உயிராக அமைகின்றன. [1] அன்பற்ற உடம்பு உயிரற்றதென்று கூறுவார் வள்ளுவர். நாண், மெல்லியலாரோடு உயிரொப்ப ஒன்ருகப் பிறந்து வளர்ந்து நின்றதென்பார் மணிமொழியார். வள்ளுவர் [2] நாணுடைமை மக்கள் சிறப்பென்பார். மேலும், [3] நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும் என்றும் குறிப்பிட்டு, புகழெனின் உயிரும் கொடுக்கும் புகழ். புண்ணியங்களுக்கும் அடிப்படை நாணே என்பதையும் விளக்கி விடுகின்ருர்,

'நாண்'—ஆண், பெண் என்னும் இருபாலார்க்கும் பொதுவான பண்பு, இருப்பினும் இருபாலாரின் நாண்களும் வெவ்வேறு தன்மையினை உடையன. நாணிற்கு இலக்கணம் கூறும் வள்ளுவர், நன்மக்கள் நாணுவது இழிந்த கருமங்காரணமாக நாணுதல். அஃதன்றி மனம், மொழி, மெய்களது ஒடுக்கத்தால் வருவன அழகிய நுதலினுடைய குலமகளிர் நாண்கள் என்று இருபாலாரின் நாணினையும் வேறுபடுத்திக் காட்டுவார்,

கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. — குறள், 1011.

இங்ஙனம் பெண்டிரின் நாணம் இயற்கையான மனம், மொழி, மெய்களான் வருவது பற்றியே இருபாலாரிலும் பெண்டிர் நாணம் சிறந்து விளங்குகிறது. எனவேதான், வள்ளுவர் மகளிரின் நாணத்தினைக் குறிப்பிடும் பொழுது 'திருநுதல் நல்லவர் நாண்' என்று புகழ்ச்சியாக அடை கொடுத்துச் சிறப்பிக்கின்ருர்.

இனி, மேனுட்டறிஞரான பிராங்லிங் என்பவர், [4] நாணத்தின் மிகச் சிவப்பான ஒளி அவள் கன்னத்தில் பரந்து, அழகுக்குப் புதிய ஒளியினையும் கொடுக்கிறது என்று பெண்டிர்க் கியல்

பாக அமைந்த நாணினை விளக்குவார், [5] ஒரு பெண்ணினுடைய பாதி நற்குணம் நாணத்தால் அமைந்திருப்பதாக அடிசன் குறிப்பிடுவார். பால்சக் என்பவர், [6] நாணம் உடம்பினுடைய மனச்சாட்சி என்று குறிப்பிட்டு நாணத்தின் இன்றியமையாச் சிறப்பினை எடுத்துக் காட்டுவார். [7] தூய்மையின் நிறமே நாணம் என்று டயோசின்சும் [8] ஒளிவிடும் விளக்கைப் போன்றதென்று கேசட்டும் மொழிவர். டிமேட்சு, [9] நாணம் அழகுக்கும் நற்குணங் கட்கும் அரண் போன்றது என்பார். இவை மட்டுமன்றி, நாண் இயற்கை அணிகலனாக அமைந்து இயற்கை அழகினையும் ஊட்டுகிறது [10] இளமைக்குரிய ஒரு அணிகலன் என்று அரிஸ்டாட்டிலும், வாழ்வில் உள்ள பெரிய அணிகலன் என்று நெப்போலியனும் குறிப்பிடுவார் இதிலிருந்தே நாணுடைமையின் முதன்மை தெரிய வருகிறது.

இங்ஙனம் பலரால் சிறப்பிக்கப் பெற்றதும், முதன்மை பெற்றதுமாகிய நாணத்தினைக் கம்பர் புலப்படுத்தும் பாங்கு ஆராயத் தக்கது.

அச்சமும் நாணும் மடனுமுந் துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப.

தொல்: பொருள், 96.

என்று பெண்டிர்க் கியல்பாய் அமைந்துள்ள பண்புகள் நான்கினைக் குறிப்பிடுவார் தொல்காப்பியர். இப்பண்புகள் அமைந்திருப்பதே பெண்மை. இவையல்லாத பண்புகள் இருப்பின் அவர்கள் உருவத்தால் பெண்ணாயினும் ஆணாகவே கொள்ளப் படும், இதனைப் புலப்படுத்தும் கம்பர் முனிவர் வாயிலாக விளக்குகின்றார் தாடகையைப் பெண்ணல்லள் என்று இராமனிடம் எடுத்துக்காட்டும் விசுவாமித்திரர், " நாணமென்னும் குணத்தை முதன்மையாகக் கொண்ட மகளிரைக் கொன்றால் அது சிரித்தற்குரிய காரணமாகும். ஆயின், இவள் பெயர் சொன்ன மாத்திரத்திலேயே ஆடவரின் புயவலிமை போய் விடும் என்றால் ஆண் தன்மை யென்பது யாரிடம் அமைந்திருக்கிற தென்று கேட்கிறார்.

நாண்மை யேயுடை யார்பிழைத் தால்நகை
ஆண்மை யேபெற்ற வன்றிற லாடவர்
தோண்மை யேயிவள் பெயர்சொலத் தோற்குமால்
ஆண்மை யென்னும தார்வசத் தாகுமே.

பால: தாடகை, 56

இன்னும், கைகேயியின் மீது வெறுப்பு கொண்ட தசரதன், பெண்ணிற்கு இலக்கணம் கூறும் பொழுது, [12] நாண் இலாதவர் பெண்ணல்லர் என்று குறிப்பிடுவதும் நோக்குதற் குரித்து.

இவ்வாறு நாணென்னும் பண்பினை முதன்மையாகக் கொண்டே பெண், ஆண் என்று பகுத்துக் காட்டுவதிலிருந்து, பெண் மாடம் நின்ற தூண்கள் நான்கனுள் முதன்மை பெறுவது நாணுடைமை என்பது புலப்படும்.

அரிசுடாட்டிலும், நெப்போலியனும் நாணினை அணிகலனுகக் குறிப்பிடுவது போன்று, கம்பரும் நாணினை இயற்கை அணிகலனுகக் குறிப்பிடுகின்ருர், அயோத்தியா காண்டத்தில் ஆறு செல் படலத்தில் இராமனைப் பிரிந்த நகரமக்கள் வெறுத்த மனத்தினராய் அணிகலன்கள் முதலியவைகளைத் துறந்து செல்கின்றனர் இதனை வருணிக்கும் கம்பர், "அழிதலில்லாத நாண்" முதலிய குணங்களாகிய அணிகலன்களையல்லாமல், தகுதி பொருந்திய வேறு அணிகலன்களையெல்லாம் வெறுத்த மேனியராய் சென்றனர் என்று குறிப்பிடுகின்ருர்.

தாவரு நாண்முத லணிய லாற்றகை
மேவரு கலன்களை வெறுத்த மேனியர்

அயோ : ஆறுசெல், 34.

இவ்வடிகளில், பல பண்புகளில் ஒன்ருன நாணினை மட்டும் குறிப்பிட்டு ஏனையவற்றைக் குறிப்பிடாது விடுவதிலிருந்து எல்லாப் பண்புகளிலும் நாணமே தலை சிறந்தது என்பது தெரிய வருகிறது. மேலும், 'தாவரு நாண்' என்று குறிப்பிடுவதிலிருந்து நாண் அழிவில்லாது இயல்பாக அமையப் பெற்றதென்பதும் புலனுகிறது.

[13] நாணம், அணிகலனுகத் திகழ்வதோடன்றி நற்குணங்களின் பாதுகாப்பாகும். [14] நாணம் நல்லொழுக்கத்தின் சின்னம் என்று அங்கேரி பழமொழியும் கூறும் கம்பரும். இதனை மறக்கவில்லை. இரக்கமற்றவர்களும், பழிபாவங்கட்கஞ்சாதவர்களுமான அரக்கியரைக் கம்பர் யாண்டும் நாணமுடையவர்களாகக் காட்டவில்லை. [15] வெட்கமில்லாதிருத்தலே வெட்கம் என்று லத்தீன் பழமொழி குறிப்பிடுவது போன்று அரக்கியாகிய அயோமுகியின் நடையின் சாயலை விளக்கும் கம்பர், [16] குற்றமற்ற பூமிதேவி வெட்கமடையும்படி நடப்பவள் என்று குறிப்பிட்டு சிறிதும் நாணமற்ற செயலைப் புலப்படுத்தி விடுகின்றனர். இங்ஙனம்

அரக்கியின் பண்பினைப்படம் பிடித்துக் காட்டிய கம்பர், கணவன் உயிர் பிரியும் பழிக்கு நாணாத கைகேயியின் இரக்கமற்ற வன்னெஞ்சினைப் புலப்படுத்தும் பாங்கும் இந்நிலையிலேயே அமைந்துள்ளது. அன்பிற்கும் இரக்கத்திற்கும் உறைவிடமான பெண்ணினத்தைச் சேர்ந்தவள் கைகேயி ஆயினும், தன் சொல்லம்பால் தன் கணவன் உயிர் நீங்கும் நிலையிலும் சிறிதும் இரக்கம் காட்டவில்லை, இது குறித்துப் பெண்பாலார்க்கெல்லாம் வசையுண்டாகுமென்று கருதிக் கங்குலாகிய நங்கை மைந்தர் முன் நிற்கவும் நாணினுள் போன்று போனதாகக் குறிப்பிடுகின்றார்.

... ... ... ... ... ... ... வொன்று மிரங்கிலா
வாணி லாநகை மாத ராஎள்செயல் கண்டு
மைந்தர்மு னிற்கவும்
நாணி னுளென வேகி னுணளிர் கங்கு லாகிய
நங்கையே.

அயோ: கைகேயி, 46.

(தொடரும்)

---

அடிக்குறிப்பு:

1. குறள்-80.
2. குறள்-1012.
3. குறள்-960.
4. The crimson glow of her modesty overspread her cheek and gave new lustre to her charms.
5 If we banish modesty out of the world, she carries away with her half the virtue that is in it.
6. Modesty is the conscienee of the body.
7. Modesty is the colour of virtue.
8 Modesty is a shining light.
9. Modesty is the citadel of beauty and virtue.
10. Bashfulness is an ornament to youth.
11. The greatest ornament of an illustrious life is modesty and humility [The New Dictionary of Througts C. N. Catrevas & J. Edwards]
12. கைகேயி சூழ் வினைப்படலம் 39.
13. Modesty is not only an ornament but also a guard to virtue.
14 & 15. உலகப் பழமொழிகள் - ப இராமசுவாமி
பக்கம் 307 & 290,

16. அயோமுகிப்படலம் 47.